பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 23 சனிக்கிழமை 09.12.2023 கதிர் 393

# அரசியல் தீர்வை காண பிக்குகள் தடையில்லை

## அஸ்கிரிய, மல்வத்த மகாநாயக்கர்கள் தெரிவிப்பு இமயமலைப் பிரகடனத்திற்கும் முழு ஆதரவு



**இனப்பிரச்சினைக்குக் காரணமானவர்கள் பௌத்தபிக்குகள்என்றும் அவர்களே தீர்வுக்குத் தடையானவர்கள்என்றும் தமிழர்கள் மத்தியில் உள்ள கருத்துத் தவறு என்று அஸ்கிரிய** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

நாமல் குமார என்ற பெயரை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ரணிலும் மைத்திரியும் சேர்ந்து 2015இல் அமைத்த நல்லாட்சி என்கிற பெயரிலான ஆட்சியின் கடைசிக் கால கட்டத்தில் மிகவும் பிரபலமான பெயர் அது.

மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையிலான தேனிலவு முறிந்து மைத்திரி ராஜபக்ஷக்களை நோக்கிச் சாய்ந்து கொண்டிருந்த 2018இல் மைத்திரியையும் கோட்டாபய ராஜபக்ஷவையும் கொல்லும் சதித்திட்டம் ஒன்று பற்றி இந்த நாமல் குமார ஊடகங்களிடம் ஒரு கதையைக் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

அதாவது அப்போதைய குற்றப் புலனாய்வுப் பிரிவின் ☞ 2

## மலையக தபாலக கட்டடங்களை தனியாருக்கு வழங்க எதிர்ப்பு

நுவரெலியா, கண்டி உள்ளிட்ட தபாலகங்களைதனியார்விடுதிகளுக்காக வழங்குவதைற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தார்கள்.

பத்தரமுல்லவில் நேற்றையதினம் ஒன்றுகூடிய ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தினர், வரலாற்றுடன் தொடர்புடைய தபால் நிலையங்களை தனியார் மயப்படுத்துவது தவறானது என்று கோசங்களை வெளிப்படுத்தினார்கள்.

அது மட்டுமன்றி தமக்கான சம்பள அதிகாரிப்பு ☞ 2

# 13ஐ முழுயாக நிறைவேற்றுவதில் ஜனாதிபதி தொடர்ந்தும் பற்றுறுதி

## உலகத் தமிழர் பேரவையுடனான சந்திப்பில் அவரே தெரிவிப்பு

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் தான் தொடர்ந்தும் பற்றுறுதியுடன் இருக்கிறார் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று உலகத் தமிழர் பேரவைப்பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினர் மற்றும் உலக தமிழர் பேரவையின் (GTF) உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச்சந்தித்துப் பேசினர்.

அச்சமோசந்தேகமோ இன்றிஇ அனைவரும் பெருமையுடனும் நம்பிக் கையுடனும் சம உரிமையுடனும் அமைதியாக வாழக்கூடிய இலங்கையைப் பற்றிய' இமயமலைப்பிரகடனம்' இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப் பட்டது.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், மறுசீரமைப்பு, சமூக நலன்மற்றும்அபிவிருத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்ட 6 முக்கிய விடயங்களை 'இமயமலைப்பிரகடனம்' உள்ளடக்கியுள்ளது.

இந்நிகழ்வில் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பைப் பிரதிநித்தவப்படுத்தி அமரபுர நிகாயவின் அம்பகஹபிட்டிய பிரிவின் அனுநாயக்க வண. மாதம்பாகம அஸ்ஸஜிதிஸ்ஸ தேரர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நீதித்துறைசங்கநாயக்கவண. சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர், மேல் மாகாணத்தின் பிரதான சங்க நாயக மற்றும் ஸ்ரீ தர்மரக்ஷித பிரிவின் பதிவாளர்வண. கிதலகமஹேமசாரதேரர். வஜிரவங்சபிரிவின்பதில் மகாநாயக்க பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் உறுப்பினரும் மனித அபிவிருத்தி ஆய்வு மையத்தின் ☞ 2

# ஒரு தரப்பை மட்டும் சார்ந்திருக்காமல் அனைத்து தரப்புகளுடனும் நட்புறவு

## இதுவே ரணிலின் அயலுறவுக் கொள்கை என்கிறார் அமைச்சர் அலி சப்ரி

ஒரு தரப்பை மட்டும் சார்ந்திருக்காமல் அனைத்துத் தரப்பினருடனும் இணக்கமாகச் செயற்பட்டு நட்புறவைக் கட்டியெழுப்புவதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமாகும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணிஅலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு என்ற வகையில்,கடந்தஆண்டுமுதல் நாம் முக்கியப் பங்காற்ற வேண்டியிருந்தது. கடந்த காலங்களில் எற்பட்ட பல்வேறு விடயங்களால் வெளிநாடுகளுடனான நமது உறவுகள் பாதிக்கப்பட்டன. ஆனால், ஜனாதிபதியின் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையினால் இலங்கையின் அயலுறவுகளைச்சரியானபாதையில் கொண்டு செல்ல முடிந்துள்ளது. அதே போன்று, எமது நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக்கொண்டு அனைத்துநாடுகளுடனும் நட்புறவை ஏற்படுத்தி வருகிறோம்.

ஒரு தரப்பைச் சார்ந்திருக்காமல் அனைத்து தரப்பினருடனும் இணக்கமாக செயல்படுவதே எமது நோக்கம். அனைத்து நாடுகளுடனும் நட்புறவைக் கட்டியெழுப்புவதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமாகும். ☞ 9

# வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்கள் மீதான கண்காணிப்பு தொடர்கிறது

## நாடாளுமன்றத்தில் வடக்கு எம்.பிக்கள் குற்றச்சாட்டு

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் இன்னமும் விசாரணையென்றபெயரில்அழைக்கப்படுவதும்,கண்காணிக்கப்படுவதும் தொடர்வதாக இலங்கை தமிழரசுக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர்தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024ஆம்ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் வெகுஜன ஊடகம் மற்றும் துறைமுகம், கப்பற்றுறை, மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

செல்வராசா கஜேந்திரன் உரையற்றுகையில், இலங் ☞ 9

# தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்கு என்ன பதில்? தேயிலைத் தோட்டக் கம்பனிகளுக்கு காலக்கெடு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான கோரிக்கைகள் குறித்து முதலாளிகளின் பதில் என்ன என்பதை டிசெம்பர் இறுதிக்குள் அறியத் தருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறும், குறைந்தபட்ச நாளாந்த சம்பளமாநாளொன்றுக்கு 1,700 ரூபா வழங்கப்படவேண்டும் என்றும் தொழிலாளர்கள் கோரி வருகின்றனர். இந்தக் கோரிக்கைகளுக்கான தோட்டக் கம்பனிகளின் பதில் என்ன என்பதை டிசெம்பர் 31க்கு முன்னர் தரும்படியே ஜனாதிபதி பணிப்புரைவழங்கினார்.

பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதிஅலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தின் பிரகாரம் பிராந்தியபெருந்தோட்டக் கம்பனிகள் தமது வேலைத்திட்டங்களை எவ்வாறு தயாரிப்பது என்பதை அறிந்து கொள்வதற்காகவே இந்தக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை ☞ 2

# மின்சார சபை புதிய சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது

புதிய மின்சார சபை சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப் படுள்ளது.

மின்சாரத்துறை தொடர்பான மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்ததேவையான விதிமுறைகளை தயாரித்தல், அதற்காக தேசிய மின்சார ஆலோசனைக் குழுவை உருவாக்குதல் என்பன இந்த சட்டமூலத்தினுடாக எதிர்பார்க்கப்படுகின்றன.

மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் மற்றும்வர்த்தகத்திற்கான நிறுவனங்களை உருவாக்கவும் இதனூடாக முன்மொழியப்பட்டுள்ளது.

டிசெம்பர்மாதம்5ஆம் திகதியிடப்பட்டுள்ள இந்த மேலதிக வர்த்தமானி மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரின் பணிப்புரைக்கமைய வெளியிடப்பட்டுள்ளது. ☞ 8

# பணம் மற்றும் துப்பாக்கிகளுடன் நட்சத்திர விடுதியில் 8 பேர் கைது

கொழும்பு ஐந்து நட்சத்திர விடுதியில்பெருமளவு பணம் மற்றும் துப்பாக்கியுடன் 8 இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப் பட்டவர்கள் மஹரகம, கந்தானை பிரதேசங்களை சேர்ந்த இளைஞர்களாவர். அவர்களிடமிருந்து ஒரு கோடி ரூபாய்பணமும்பறிமுதல் செய்யப்பட்டது.

இவர்கள் அனைவரும் தாம் தங்கியிருந்தவிடுதியில்சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்துகொண்டதை அடுத்து பொலிஸாருக்கு தரப்பட்டதகவலின் அடிப்படையில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றில் நிறுத்தப்பட்ட அவர்களை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# தமிழ் ஊடகங்கள் கிளுகிளுப்பு தேடுகின்றனவாம்

## சாணக்கியன் எம்.பி. சாடல்

நாடாளுமன்றத்திலே தனக்கெதிராக ஒரு அடிமுட்டாள் பேசிய விடயங்களை தலைப்புச் செய்தியாகப் போட்டுதமிழ் ஊடகங்கள் கிளுகிளுப்புத் தேடுகின்றன என்று சாடியுள்ளார்தமிழ்அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்இரா.சாணக்கியன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்ற2024 ஆம்ஆண்டுக்கானவரவு செலவுத்திட்டத்தின்வெகுஜன ஊடகம் மற்றும் துறைமுகம்,கப்பற்றுறை, மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நேற்று இந்தச் சபையில் உரையாற்றிய பின்னர் நான் ஊடக நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக வெளியேசெல்லும்போது இந்த சபையில் ஒருவர் "ஆம்பளையாஇருந்தால் இந்த சபையில் இருந்து எனது ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவே இந்தக் கொலைச்சதியின் சூத்திரதாரி என்று கூறி அவருடன் தான் நடத்தினார் என்று கூறும் ஒலிப்பதிவு உரையாடல் ஒன்றையும் அவர் வெளியிட்டிருந்தார்.

அவர் கூறிய கதை இதுதான்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி நாலக்க டி சில்வா என்பவர் ஒரு வருடத்திற்கு முன்னரே அறிமுகமானார். சர்வதேச பயங்கரவாத செயற்பாடு குறித்து எனக்கு தகவல் கிடைத்திருந்தது. இந்தத் தகவலை இலங்கையின் போலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிற்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தேன். பொலிஸ்மா அதிபரே, குற்றப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரி நாலக்க சில்வாவை எனக்கு அறிமுகப்படுத்தினார்.

கடந்த காலங்களில் பல விடயங்களை நாலக்க சில்வா என்னுடன் பேசியிருந்தார். இதில் முக்கியமாக 2020 இல் மைத்திரி - கோட்டாபய கூட்டணியமைக்கப் போகின்றனர். தற்போதே இவர்கள் நெருங்கியுள்ளனர்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே மோதல் இருக்கிறது. 2020 நெருங்கும்போது, நிலைமை கைமீறிச் சென்றால், 'மாகந்துரே மதுஷ்' என்ற (பாதாள கும்பலைச் சேர்ந்த தலைவன் என்றே நான் அறிந்துள்ளேன்) நபரைப் பயன்படுத்தி, முடிந்ததை செய்யுங்கள் என்றே அந்த அதிகாரி எனக்குக் கூறினார்.

என்ன செய்யவேண்டும் என நான் அப்போது கேட்டேன். எது வேண்டுமானாலும் செய்யுங்கள் எனக் கூறினார்.

அதற்குக் காரணம், மாகந்துரே மதுஷ் - கோட்டாபய இடையே பிரச்சினையொன்று இருக்கிறது. அதேபோல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் மாகந்துரே மதுஷிற்கும் இடையே பிரச்சினையொன்று இருக்கிறது.

போதைப் பொருள் விற்பனைக்கு எதிராக ஜனாதிபதி குரல் கொடுத்து, நெருக்கடிகளை ஏற்படுத்திவருவதே இதற்குக் காரணம். இவற்றைப் பயன்படுத்தி ஏதாவது செய்யுமாறே அந்த அதிகாரி எனக்குக் கூறினார்.

கிழக்கைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரின் தொடர்பு அண்மையில் கிடைத்தது. கிழக்கில் தமிழ் கட்சியொன்றில் அதிகவாக்குகளைப் பெற்ற அரசியல்வாதி அவர்.

இவர் குறித்தும் பல தகவல்கள் கிடைத்தன. மட்டக்களப்பு அல்லது அம்பாறை பிரதேசத்திற்கு ஜனாதிபதி செல்லும்போது தாக்குவோம் என்றும், இந்தத் தாக்குதல் பழியை குறித்த அரசியல்வாதி மீது சுமத்துவோம் என்றும் பொலிஸ் அதிகாரி நாலக்க சில்வா எனக்குக் கூறினார்.

இதனை இன்னும் மறைத்து வைப்பது நல்லதல்ல என்று எனக்குத் தோன்றியது. அதனால் இதனை ஊடகங்களுக்கு தெரியப்படுத்த முன்வந்தேன் என்றும் கூறினார்.

இவரது முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. நாமல் குமாரவுடன் தொடர்பில் இருந்தவர் என்று தெரிவித்து அலெக்ஸ் என்கிற இந்தியர் ஒருவரும் இந்தக் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

நாலக டி சில்வா உடனடியாக அவரது பதவியிலிருந்து இடம்மாற்றப்பட்டார். பின்னர் பதவி நீக்கமும் செய்யப்பட்டார். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவருக்கு எதிரான விசாரணைகளை நடத்தி தனது அறிக்கையை சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தது. நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டது.

5 வருடங்கள் கடந்து இப்போது நாலக டி சில்வாவை இந்த வழக்கிலிருந்து நீதிமன்றம் விடுவித்துவிட்டது. அதற்குக் காரணம், அவருக்கு எதிராகப் போதிய சாட்சியங்கள் இல்லை என்று சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்ததுதான்.

2019ஆம் ஆண்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதே ஆண்டில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ பெரும் வெற்றி பெற்றிருந்தார். ஆனால் 5 வருடங்கள் கழித்து அந்தக் கொலை முயற்சிக்குச் சாட்சியே இல்லை என்றுவிட்டார்கள். என்னவொரு வில்லத்தனம் இது....!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மல்வத்த பீட மாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர். அரசியல்வாதிகள் அன்றி தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நேரடியாகப் பேசி அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதை தாம் வரவேற்று ஆதரிக்கிறார்கள் என்றும் இரு மாகாநாயக்கர்களும் தெரிவித்துள்ளனர். நேற்றுத் தம்மைச் சந்தித்துப் பேசிய உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளிடம் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

சிறந்த இலங்கைக்கான பௌத்த சங்க பிரதிநிதிகள் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் நேற்று கண்டிக்குச் சென்றுஇ காலை 8.30 மணியளவில் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கத் தேரர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரைச் சந்தித்துப் பேசினர். தொடர்ந்து மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரையும் தனித்தனியாகச் சந்தித்தனர். அவர்களிடத்தில் இமயமலைப் பிரகடனத்தினை ஒப்படைத்துஇ அதனை மையப்படுத்திய செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்கு ஆசீர்வாதத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

மல்வத்த பீடாதிபதி சுமங்கல தேரர் செய்துகொடுத்த விசேட ஏற்பாட்டின் அடிப்படையில் கண்டி தலதா மாளிகைக்குச் சென்ற அவர்கள் அங்கும் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்புக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு உலகத்தமிழர் பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்ததாவது:

இமயமலைப்பிரகடனத்தினை அஸ்கிரியஇ மற்றும் மல்வத்து பீடாதிபதிகள் மிகுந்த ஆர்வத்துடன் பெற்றுக்கொண்டதோடு அதனை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் தாங்கள் ஆதரவாக இருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

இமயமலைப்பிரகடனத்தைத்தான் மனப்பூர்வமாகப் பெற்றுக்கொள்கிறார் என்றும் சமாதானம் சகோதரத்துவம் சமத்துவம் என்ற விடயங்களை தாமும் ஆதரிக்கிறார் என்றும் இப்படியாக மக்களிடையே பரப்புரை செய்யப்பட்டு மக்களால் ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்பதனைத் தான் ஆதரிக்கிறார் என்று அஸ்கிரிய மாகாநாயக்கர் தெரிவித்தார். அதற்குத் தான் துணை நிற்பார் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து மல்வத்த பீடத்தின் மாகாநாயக்கர்களைச் சந்தித்தனர். அவரும் இந்த முயற்சியை ஆதரித்து வரவேற்றார். போர் நடந்தபோதே தான் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசி சமாதானத்தை உருவாக்க விரும்பினார் என்றும் ஆனால் அரசு அதற்கு அனுமதி வழங்கவில்லை என்றும் தெரிவித்தார்.

போர் முடிந்த பின்னர் திருகோணமலைஇ யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினார் என்பதையும் தெரிவித்தார். அதற்கு ஆதாரமான படங்களையும் காண்பித்தார். மக்கள் மக்களுடன் பேசிஇ இன மத சாதி வேறுபாடுகள் இன்றி பிரச்சினைகளைத் தாங்களாகக் கலந்துரையாடித் தீர்ப்பதற்கான வழிமுறையைத் தானும் மனதார வாழ்த்துகின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுவாகக்கூறும்போதுஇ நாட்டின் பிரச்சினைகளுக்கு பிக்குகளே காரணம் என்றும் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அவர்களே தடையாக இருக்கின்றார்கள் என்றும் தமிழ் மக்களிடம் இருக்கும் கருத்துப் பொய்யானது என்று இந்த இரு உயர் பௌத்த மாகாநாயக்கர்களும் மறுத்தனர். தாங்களும் இலங்கையர்கள் என்ற முறையில் பேச்சு மூ-லம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதையே விரும்புகின்றனர் என்றும் தெரிவித்தனர்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுவை அடைய முடியும் என்றால் புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளை மட்டுமல்லஇ சர்வதேச நாடுகளின் முதலீடுகளையும் அதன் ஊடாக வருமானத்தினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் புலம்பெயர் தமிழர்கள் நாட்டைப் பிரிப்பதற்கு முயற்சிக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக காணப்பட்டன. எனினும் ஒருமித்த நாட்டுக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வினை பேச்சு ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அதிகமாவுள்ளது என்றார்.

இதேவேளை நேற்றிரவு யாழ்ப்பாணத்தை வந்தடைந்த உலகத் தமிழ்ப் பேரவைக் குழுவினர் இன்று காலை 8.30 மணியளவில் நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். தொடர்ந்து நல்லை ஆதீன குருமுதல்வரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். அதனைத் தொடர்ந்து யாழ். ஆயரையும் சந்தித்து ஆசிகளைப் பெறவுள்ளனர். பகல் 11 மணியளவில் சிவில் சமூகத்தினரைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். எனினும், இவர்களை கட்டுப்படுத்துவதற்காக கலகத்தடுப்பு பொலிஸார் வரவழைக்கப்பட்டிருந்ததோடு நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு ஆகிய சாதனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

எனினும், குறித்த தொழிற் சங்கத்தினர் பேரணியாக செல்வதை தவிர்த்து வீதியின் அருகில் காட்டமான கோசங்களை எழுப்பிவிட்டு கலைந்து சென்றனர்.

## தொழிலாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அது குறித்த எதிர்கால நடவடிக்கைகளுக்காக குழுக்களை நியமிக்க எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார் ஜனாதிபதி. தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகள் குறித்து ஆலோசிக்க ஒரு குழுவை நியமிக்கவும், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இன்னுமொரு குழுவை நியமிக்கவும் இங்கு முன்மொழியப்பட்டது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் தமக்கு வலுவான நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச்செய்வதற்கு அனைவரினதும் பங்களிப்பு அவசியம் எனவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் ஆசிய நாடுகளின் சனத்தொகை அதிகரிப்புடன் உணவுத் தேவையும் அதிகரிக்கும் எனவும், அதற்காக இந்நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரம் தயாராக வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க மற்றும் பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகள் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## தமிழ் ஊடகங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள்" என்று கூறினார்.

அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் ஜனாதிபதியே இந்த சபையில் அவரிடம் கேள்விகள் எழுப்பும் போது பதிலளிக்காமல் தப்பியோடுவதைத்தான் நாம் பார்த்திருக்கின்றோம். எனவே அவர் என்னிடம் கேட்கும் கேள்வியை ஜனாதிபதியிடம் போய் "நீங்கள் ஆம்பிளையா இல்லையா" என்று கேட்க வேண்டும்.

நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளராக பதவி வகித்தேன் என்பது அனைவருக்கும் அறிந்த விடயம். இவர் புதிதாக ஒரு விஞ்ஞானி போல் கண்டுபிடித்த விடயம் அல்ல. கண்டியில் நான் கற்ற பாடசாலையைக்கூட பிழையாக சொல்லியிருந்தார்.

நான் கண்டியில் உள்ள திரித்துவ கல்லூரியில் கல்வி கற்றேன். அது சிங்கள பாடசாலை என்று சொல்லியிருந்தார். அது மூவின மாணவர்களும் படித்த பாடசாலை. எனக்கு சிங்கள நண்பர்கள் இருப்பதாக சொல்லியிருந்தார். எனக்கு சிங்கள, தமிழ், இஸ்லாமிய நண்பர்கள் உள்ளார்கள்.

என்னுடைய திருமணத்தைப்பற்றி சொல்லியிருந்தார். இந்த ஊடகங்களும் இவ்வாறு விமர்சிப்பவர்களும் கூறுவதனைப் பார்த்தால் எனக்கு இதுவரையில் 5, 6 திருமணங்கள் நடந்திருக்க வேண்டும். இவ்வாறான அடிமுட்டாளின் கதைகளுக்கு நான் பதில் சொல்ல விரும்பாது விட்டாலும் மக்கள் எனது பதிலை எதிர்பார்க்கும் காரணத்தினால் இவ்விடயத்தை சொல்லியிருக்கின்றேன்.

எனது வளர்ச்சிக்கு காரணமே எனக்கு எதிராக முன் வைக்கப்படும் விமர்சனங்கள்தான். இவ்வாறான ஒரு அடிமுட்டாள், வடைவிற்றுத்திரிந்த ஒருவர் சொல்லும் கதையை, நாடாளுமன்றத்தில் சொல்லப்படுகின்றது என்பதற்காக ஊடகங்கள், தமிழ் ஊடகங்கள் தலைப்பு செய்தியாகப்போட்டு அதிலே ஒரு கிளுகிளுப்பு ஒரு சந்தோஷம் அடைகின்றன. நான் இன்று நாடாளுமன்றத்தில் மிகவும் வயது குறைந்த உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு இவ்வாறான விமர்சனங்கள்தான் உதவின. இவ்வாறான விமர்சனங்கள் எனக்கு இன்னும் பலத்தையே சேர்க்கும்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ஊடகவியலாளர்கள் அரச கட்டமைப்புக்களினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ஐ.பி.சியின் பிராந்திய செய்தி சேகரிப்பாளர் தீபன் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். அதேபோல் அண்மையில் ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வருகை தந்தபோது செய்த செய்தி சேகரிப்புக்காக சென்ற ஊடகவியலாளர்களான கிருஸ்ணகுமார், சஷி புண்ணிய மூர்த்தி ஆகியோருக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றும் ஊடகவியலாளர்கள் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர்களினாலும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை உருவாக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. நாட்டு மக்களை அடக்குவதற்கு ஊடகத்தை அடக்குவது ஒரே வழி என்று அரசு நினைக்குமாயின் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடையும்.

அரச தொலைக்காட்சி சேவையான வசந்தத்துக்கு வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து செய்திகளை வழங்குபவர்களுக்கு ஒரு செய்திக்கு 1000 ரூபா வழங்கப்படுகிறது. ஆனால் ஐ.டி.என். தொலைக்காட்சியில் ஒரு செய்திக்கு 2000 ரூபா வழங்கப்படுகிறது. ஊடகவியலாளர்களின் சேவையை இன அடிப்படையில் வேறுபடுத்துவது முறையற்றது என்றார்.

## 13ஐ முழுயாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான வண. களுபஹன பியரதன தேரர், மத்திய மாகாணத்தின் பாததும்பர பிரதம சங்க நாயக வண. நாரம்பனாவே தம்மாலோக தேரர்இ ராமன்ய நிகாயவின் பிரதிப் பதிவாளர் வாந்துவே தம்மவங்ச தேரர்கள் கலந்துகொண்டனர்.

உலக தமிழர் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்திஇ ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன்இ பவான் பவகுகன்இ வேலுப்பிள்ளை குகனேந்திரன்இ அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கலாநிதி கண்ணப்பர் முகுந்தன், பிரகாஷ் ராஜசுந்தரம், கனடாவிலிருந்து ராஜ் தவரத்னசிங்கம்இ அமெரிக்காவிலிருந்து கலாநிதி ஜெயராஜா ஆகியோருடன் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்கவும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து உலகத்தமிழர் பேரவையின் பிரதிநிதி பவன் பவகுகன் காலைக்கதிர் பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான தனது பற்றுறுதியை ஜனாதிபதி வெளிப்படுத்தினார். எல்லாத் தேவைகளையும் மத்திய அரசே நிறைவேற்ற வேண்டும் என்பதில்லை, மாகாண அரசுகள் அந்தந்தப் பிராந்தியங்களின் தேவைகளைச் சிறப்பாக ஆற்ற முடியும் என்பதைப் பற்றியும் விளக்கினார்.

தொடர்ந்து நிரந்தரத் தீர்வுக்கான அரசமைப்பு மாற்றம் குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். அதற்கு மக்கள் ஆணை வேண்டும் என்று தெரிவித்தார். அடுத்த ஆண்டு தேர்தல்கள் நடைபெறும் என்றும் அதில் மக்கள் ஆணையைப் பெற்று அரசமைப்பு மாற்றத்துக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

பல வருடங்களாகப் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்கள் கடந்த பொருளாதார நெருக்கடிக்கும் முகங்கொடுத்து பெரும் இன்னல்களை எதிர்கொண்டனர் என்றும் இதனை வடக்கு கிழக்கு மக்கள் பல வருடங்களாக அனுபவித்தனர் என்பதையும் ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

புதிய நாட்டைக் கட்டியெழுப்பும்போது புதிய பொருளாதாரம் அவசியம் எனவும் இமயமலைப் பிரகடனம் போன்ற வெளியீடுகள் முக்கியமானவை எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதிஇ ஒற்றுமை மற்றும் ஸ்திரத்தன்மை இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான எதிர்கால

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் பள்ளிவாசல்களை புதிதாக பதிவுசெய்வதில் பிரச்சினை இல்லை

## அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பதில்

பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களை பதிவு செய்யும் நடவடிக்கையை மேற்கொள்வதில் பிரச்சினை இல்லை. அரபுக் கல்லூரி தொடர்பான ஆவணங்களுக்கு பாதுகாப்பு அமைச்சால் அனுமதி கிடைக்கப்பெற்றால் பதிவு செய்ய முடியும் என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

நாடளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், இம்ரான் மஹ்ரூப், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் உரையாற்றும்போது கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது எம்.எஸ். தௌபீக் எம்.பி தெரிவிக்கையில்,

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர், முஸ்லிம் பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரிகள் முஸ்லிம் கலாசார திணைக்களத்தில் பதிவு செய்வதில்லை. அதேபோன்று முஸ்லிம் கலாசார திணைக்களத்தில் தற்போது ஆளணி பற்றாக்குறை இருந்து வருகிறது. அதனால் அங்கு பணிகள் முறையாக இடம்பெறாமல் இருக்கின்றன. - என்றார்.

அடுத்து, இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவிக்கையில் -

3 மதங்களுக்கு தனியான அமைச்சு இருந்து வந்தது. தற்போது பௌத்த சாசன அமைச்சின் கீழ் திணைக்களங்கள் ஊடாகவே ஏனைய மத நடவடிக்கைகள் வழிப்படுத்தப்பட்டு வருகின்றன. தொல்பொருள் திணைக்களம் அனைத்து இன மக்களையும் சமமாக மதிக்கின்ற வகையில் நெறிப்படுத்த வேண்டும். -என்றார்.


மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் நோர்வூட் பிரதேசத்தில் நூறு வருடங்களாக செயற்பட்டு வந்த பள்ளிவாசல் அங்குள்ள ஏழை மக்களால் செயற்படுத்தப்பட்டு வந்திருந்தது. பள்ளிவாசல் அமைந்திருந்த காணியில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அங்கு 3 குடும்பங்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுத்து, அதன் மூலம் பள்ளிவாசலுக்கு வருமானம் ஏற்படுத்திக்கொடுத்திருந்த நிலையில், பிரதேசசெயலாளர் பள்ளிவாசல் அமைந்திருக்கும் காணி அரச காணி என தெரிவித்து வழக்கு தொடுத்தார். அதில் அவர் வெற்றி பெற்றதால் தற்போது அந்த மக்களுக்கு பள்ளிவாசல் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் இது தொடர்பாக தலையிட்டு பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேநேரம் 90 வருடங்களுக்கும் அதிக காலமாக மஹர சிறைச்சாலையில் இருந்துவந்த பள்ளிவாசல் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் மூடப்பட்டுள்ளது. அதனையும் மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

இந்த விடயங்களுக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில்,



முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டு செல்ல தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திணைக்களத்தில் அதிகாரிகளின் பற்றாக்குறை இருக்கிறது. அங்கு மோசடிகளில் ஈடுபட்டுவந்த அதிகாரிகளை நீக்குவதற்கு எடுத்த நடவடிக்கையாலே அந்தக் குறைபாடு ஏற்பட்டுள்ளது. என்றாலும், திணைக்களத்தின் நடவடிக்கைகளில் குறைபாடு ஏற்படாமல் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துவருகிறோம். ஏதாவது பிரச்சினை இருக்குமா னால், அது தொடர்பில் எனக்கு அறிவித்தால் நான் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பேன்.

அத்துடன் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களை பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்வதில் பிரச்சினை இல்லை. மதரசாக்கள் தொடர்பான ஆவணங்களுக்கு பாதுகாப்பு அமைச்சால் அனுமதி கிடைக்கப்பெற்றால் பதிவு செய்ய முடியும்.

அத்துடன் வருமானம் குறைந்த பள்ளிவாசல்கள் தொடர்பாக புதிய வேலைத் திட்டம் மேற்கொள்ள இருக்கிறோம். புத்தசாசனத்துக்கு மாத்திரமே நிதியம் இருக்கிறது. ஏனைய மதங்களுக்கு நிதியம் இல்லை. அது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். அதேபோன்று திருகோணமலையில் தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

மேலும், நோர்வூட் பள்ளிவாசல் தொடர்பாக முஸ்லிம் விவகார திணைக்களத்தினால் அறிக்கை கோரி இருக்கிறோம். அறிக்கை கிடைத்த பின்னர், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும்.

அத்துடன் தற்போது இந்த விடயம் சட்ட பிரச்சினைக்குள்ளாகி இருக்கிறது. அதனால் பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி, முடியுமான நிவாரணங்களை வழங்க முயற்சிக்கிறேன். அதேநேரம் மஹர பள்ளிவாசல் தொடர்பாக சிறைச்சாலை திணைக்களத்துடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்போம். - என்றார். (05)

# பாடசாலை ஒன்று கூடலின் போது வவுனியாவில் வீதியில் கைகலப்பு

## பொலிஸார் விசாரணை

வவுனியா நகரை அண்டிய பாடசாலை ஒன்றின் உயர்தர மாணவர்களின் ஒன்று கூடலின் போது பாடசாலைக்கு முன்பாக வீதியில் நின்றவர்களுடன் பாடசாலை மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரை அண்டிய பிரபல பாடசாலை ஒன்றின் உயர்தர மாணவர்களுக்கான ஒன்று கூடல் புதன்கிழமை மதியம் இடம்பெற்றது. இதன்போது உயர்தர மாணவர்கள் சொகுசு கார்கள் மற்றும் அதியுயர் வேகம்கொண்ட மோட்டார்சைக்கிள்கள் என்பவற்றுடன் பாடசாலைக்கு வருகை தந்ததுடன், பாடசாலை முன்பாக அவற்றை செலுத்தி போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தினர்.

இதன்போது பாடசாலையில் ஏனைய வகுப்பு மாணவர்களை ஏற்ற வந்த பெற்றோர் ஒருவருடன் விபத்து ஏற்பட்டதையடுத்து, பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு அப்பகுதியில் இரு தரப்பும் கைகலப்பில் ஈடுபட்டனர். சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்தியதையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் வருகை தந்து நிலைமையைக் கட்டுப்படுத்தினார்.

இந்தச் சம்பவத்தின் போது, பாடசாலை வளாகத்தற்குள் இருந்து வருகை தந்து உயர்தர மாணவர்கள் பல தடவைகள் பெற்றோருடன் முரண்பட்ட போதும், பாடசாலை நிர்வாகம் மற்றும் கடமையில் இருந்த பதில் அதிபர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைளை எடுக்கவில்லை எனவும், நிலைமையைக் கட்டுப்படுத்தவில்லை எனவும் அப்பாடசாலையின் பெற்றோர்களும், பாடசாலை சமூகமும் குற்றம் சாட்டியுள்ளது.

குறித்த மாணவர்கள் பின்னர் குறித்த சொகுசுகார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணித்து வைரவபுளியங்குளம் பகுதியிலும் பொது போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தி குழப்பம் விளைவித்தாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (05)

# மாத்தறை நீதிமன்ற களஞ்சியசாலையில் திருடப்பட்ட துப்பாக்கிகளுடன் மூன்று வர்த்தகர்கள் கைதாகினர்

மாத்தறை நீதிவான் நீதிமன்ற களஞ்சியசாலையில் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட இரண்டு ரிவோல்வர் துப்பாக்கிகளுடன் மூன்று வர்த்தகர்கள் சந்தேகத்தின் பேரில் மாத்தறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மாத்தறை, விஹாரஹேன பிரதேசங்களில் வைத்து மாத்தறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றகளஞ்சியசாலையில் பணியாற்றும் மூன்று பணியாளர்களிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டு ரிவோல்வர் துப்பாக்கிகளில் ஒன்று வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி எனவும் மற்றையது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி எனவும் பொலிஸார் தெரிவித்தனர். நீதிமன்ற களஞ்சியசாலைபணியாளர்கள் மூவரும் துப்பாக்கிகளை குறித்த வர்த்தகர்களுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஜனாதிபதி நல்லிணக்கம் குறித்து பேசுகின்றார் ஆட்சியாளர்களோ வேறு விதத்தில் செயற்பாடு

## நினைவேந்தல் கைது குறித்து மனித உரிமை கண்காணிப்பகம்

1983 முதல் 2009 வரையான உள்நாட்டு போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தமைக்காக இலங்கை அதிகாரிகள் நாட்டின் துஸ்பிரயோகபயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் 9 தமிழர்களை தடுத்துவைத்துள்ளனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக தனது சர்வதேச சகாக்கள், வர்த்தக சகாக்கள், ஐக்கியநாடுகள் ஆகியவர்களுக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தைக் கைவிடப்போவதாகபுதியசட்டத்தை அறிமுகப்படுத்தப்போவதாக தெரிவித்து வந்துள்ளது. -என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டம் நீண்டகாலமாகசிறுபான்மை சமூகத்தினர் சிவில்சமூகசெயற்பாட்டாளர்களை தடுத்துவைத்து சித்திரவதை செய்வதற்கு பயன்பட்டுள்ளது என சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள வர்கள் அனைவரையும் அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்யவேண்டும். அந்த சட்டத்தை நீக்கும்வரை அதனைப் பயன்படுத்துவதைத் தடை செய்யவேண்டும். இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவேந்திய தமிழர்களுக்கு எதிராக இலங்கை அதிகாரிகள் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தியமை ஈவிரக்கமற்ற துஸ்பிரயோகம் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதி இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இது அரசாங்கத்தின் தொடர்ச்சியான பாரபட்சத்தை எதிர்நோக்கும் சமூகத்தை மேலும் அந்நியப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நல்லிணக்கம் குறித்து பேசுகின்றார். ஆனால் அவரது அரசாங்கம் இனப்பிரிவினைகளை மேலும் ஆழமாக்கும் விதத்திலேயே செயற்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் நவம்பர் 25 - 26 ஆம் திகதிகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்த அதிகாரிகள் நினைவேந்தல் நிகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட சோடனைகள் ஒலிபெருக்கிகள் போன்றவற்றையும் கைப்பற்றினர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் எதிரான உள்நாட்டு யுத்தம் பிரிவினைவாதஆயுத அமைப்பின் தோல்வியுடன் 2009 இல் முடிவடைந்தது முதல் தொடர்ச்சியாக ஆட்சிக்குவந்தவர்கள் யுத்தத்தில் உயிரிழந்தவர்களைத்; தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவேந்துவதை தடுத்துவந்துள்ளன என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது. டிசெம்பர் 2 ஆம் திகதி இலங்கையின் வடபகுதி முல்லைத்தீவின் பொலிஸார் 1984 ஆம் ஆண்டு ஒதியமலை தமிழ் கிராமமக்கள் படுகொலை செய்யப்பட்டமை நினைவேந்த முயன்றவர்களை தடுத்து நிறுத்தினர் எனவும் மனித உரிமைகள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

உயிரிழந்தவர்களை இனமத சிறுபான்மையினர் நினைவுகூருவதைதடுத்துநிறுத்துவது மதம் நம்பிக்கை வெளிப்பாடு ஒன்றுகூடுதல் ஆகியவற்றிற்கான சுதந்திரத்திற்கான உரிமையை மீறும் செயல் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (05)

# இலங்கை - ரஷ்யா இடையிலான பாதுகாப்புறவு மீது திடீர் கவனம்

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் அழைப்பின் பேரில் நாட்டு வருகை தந்துள்ள ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் பிரதிநிதிகள் குழுவுடன் இந்தக் கலந்துரையாடல் வியாழக்கிழமை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது.

ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் உப செயலாளர் ஓமலே விளாடிமிரோவிச் தலைமையில் ரஷ்யாவின் தூதுக்குழுவினர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியதுடன், இதன்போது இரு நாட்டு பாதுகாப்புகள் மற்றும் இலங்கைக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் பலப்படுத்தவும், அதற்கு ரஷ்யா வழங்கும் ஒத்துழைப்புகள் தொடர்பிலும், மேலும் சர்வதேச தகவல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பின் போது நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேபந்து தென்னக்கோன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீர்வின் முதன்மைச் சக்தி

சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்தினரும் உலகத் தமிழர் பேரவையும் இணைந்து இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்றை நோக்கிய 6 அம்சங்களை உள்ளடக்கிய 'இமயமலைப் பிரகடனம்' ஒன்றை வெளியிட்டுள்ளன. அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த இந்தத் தரப்பினர் நேற்று அதனை அவர்களிடம் கையளித்தும் உள்ளனர்.

'இமயமலைப் பிரகடனம்' என்பது எந்தவொரு குறிப்பிட்ட சமூகத்தின் கருத்தியல் அடிப்படைகளிலும் அதிகளவு சார்ந்திருக்காமல் இலங்கைக்கு ஒரு புதிய மற்றும் முற்போக்கான பார்வையை விளக்கிக்கூறும் ஒரு நடைமுறை ஆவணமாகும் என்று இரு அமைப்பினரும் தெரிவித்துள்ளனர்.

• தமது அடையாளம் மற்றும் பெருமையை இழந்துவிடுவோமோ என்ற பயம் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏற்படாத வகையில் நாட்டின் பல்வகைமைத்தன்மையைப்பேணிப்பாதுகாத்தலும், ஊக்குவித்தலும்.

• பொருளாதார நெருக்கடியை மேற்கொள்ளல், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க பொருத்தமான அபிவிருத்தி மாதிரியைத் தேர்ந்தெடுத்தல், வெளிநாட்டு இலங்கையர்களதும் மற்றவர்களதும் ஈடுபாடு மற்றும் முதணிலீட்டிற்கு வசதிசெய்தல், இவை மூலம் நாடு வளர்ச்சிப் பாதையில் இருப்பதை உறுதிசெய்து இலங்கையை நடுத்தர வருமானம் கொண்ட நாடாக மாற்றுதல்.

• மாகாண மட்டத்தில் போதுமானளவு அதிணீகாரப் பகிர்வினை உறுதிப்படுத்தியும், தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடியதும், சமத்துவம் மற்றும் அனைத்து மக்களுக்கும் சமமான குடியுரிமையை முன்னிலைப்படுத்தியும் அதற்கான பொறுப்புவாய்ந்த நிறுவனங்களை உள்ளடக்கியதுமான ஒரு அரறிசமைப்பை உருவாக்குதல், அதுவரை நடைமுறையில் இருக்கும் அரசமைப்பிச்ல் உள்ளவாறான அதிகாரப் பகிர்வினைக் கண்ணியத்துடன் நடைமுறைப்படுத்தல்.

• ஒன்றுபட்ட பிச்ளவுபடாத நாட்டினுள் அதிகாரத்தைப் பகிர்தலும், மத, கலாசார மற்றும் ஏனைய அடையாளங்களை ஏற்று அத்தகைய அடையாளங்களுக்கு மதிப்பளிப்பதோடு, இனங்களுக்கிடைஎலான நம்ச்பிக்கை மற்றும் மதங்களுக்கிடையிலான நம்ச்பிக்கையைக் கட்டியெழுப்ப உழைத்தல்.

• கடந்த கசப்பான காலங்களில் இருந்து கற்றுக்கொள்ள உறுதிகொண்டு, மீண்டும் இவ்வாறான துயரங்கள் ஒருபோதும் ஏற்படாதிருக்க பொறுப்புக்கூறல் உட்பட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஒப்புரவு அடைந்த ஓர் இலங்கைக்கான தூநீர நோக்கு.

• இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகளுக்கும் இதர சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் மதிப்பளித்து, சுயாதீனமான மற்றும் ஆற்றல் வாய்ந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன்; மூலம் இலங்கை ஜனநாயக்;, சமாதானமான, வளமான உலக நாடுகள் மத்தியில் தனது பெருமையை நிலைநாட்டுவதற்கு வழிசெய்தல்.

ஆகியனவே இமயமலைப் பிரகடனத்தின் 6 அம்சங்களுமாகும். இதற்கு முன்னர் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்தினரும் உலகத் தமிழர் பேரவையினரும் சந்தித்துக் கலந்துரையாடி எட்டப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அவர்கள் இந்தப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர்.

நிரந்தர அமைதிக்கான இந்த முயற்சி நல்லதுதான், வரவேற்கத்தக்கதுதான். என்றாலும், இது தொடர்பில் உறுத்தலும் இல்லாமல்இல்லை. இந்துப்பிரகடனத்தின்போது அதில்ஒருதரப்பினரான சிங்கள மக்கள் மத்தியில் இருந்து பௌத்த மதகுருமார்கள் அமைப்பு பங்கெடுத்துள்ளது. மறுபக்கத்தில் இலங்கையில் வாழும் தமிழர்கள் எவரும் அதில் பங்கெடுக்கவில்லை. பிரகடனம் வெளியிடப்படுவதற்கு முன்னர், அது குறித்து இங்குள்ள அரசியல் கட்சிகளுடனோ அரசியல் தலைவர்களுடனோ மக்களுடனோ பகிரங்கமான எந்தவொரு கலந்துரையாடலும் நடத்தப்படவுமில்லை. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இதுவொரு மிக மோசமான செயல்.

யார் எதைச் செய்தாலும் இறுதியில் பிரச்சினையை அனுபவிப்பவர்களும்அதற்கானதீர்வைஏற்றுகொள்ளவேண்டியவர்களும் இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களே. அவர்களின் ஆதரவின்றி எந்தவொரு தீர்வு முயற்சியும் வெற்றிபெற முடியாது. வெளியிலிருந்து திணிக்கப்படக்கூடிய எந்தவொரு தீர்வுத் திட்டமும் இங்குள்ள தமிழர்களுக்கு ஏற்புடையதாக இருக்கமுடியாது. எனவே எந்தத் தீர்வு முயற்சியாக இருந்தாலும் அதில் இங்குள்ளவர்களின் பங்களிப்பும் ஆதரவும் இருந்தாக வேண்டும். இல்லையேல் அந்த முயற்சிகளில் பயனில்லை.

இமயமலைப் பிரகடனத்தைப் பொறுத்தவரையில் அதனை வெளியிட்ட பின்னரே இங்குள்ள தமிழர்களுடன் கலந்துரையாடலை நடத்த முற்படுகிறார்கள். இது முற்றிலும் ஏற்புடையதல்ல. புலம்பெயர் அமைப்புக்கள் ஈழத் தமிழர்களின் தீர்வு முயற்சிகளுக்கும் நீதிக்கான போராட்டத்திற்கும் விடுதலைக்கும் ஆதரவுச் சக்திகளாக இருக்க முடியுமே தவிர, தீர்வைத் திணிக்கும் சக்தியாகவோ இங்குள்ள தமிழர்களுக்காக முடிவெடுக்கும் தரப்பினராகவோ ஒருபோதும் இருக்கமுடியாது. அப்படி அவர்கள் கருதிக்கொண்டால் அது தவறு. அத்தகையமுயற்சிகள்பயனற்றவை. எந்தவொருதீர்வாக இருந்தாலும் அது இங்குள்ள தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். தீர்வுக்கான முன்முயற்சிகளும்கூட அப்படியே!

இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் அவர்களே பிரதான பங்காளிகளாக இருக்கவேண்டும். இந்தியாவோ புலம்பெயர் தமிழர்களோ அல்லர். அவர்கள் அனைவரும் ஊக்குவிப்பாளர்களாக அல்லது ஆதரவுச் சக்திகளாக மட்டுமே இருக்கமுடியும்.

# தமிழ்ச் சொல்லாக்கத்தில் கவனிக்கவேண்டியவை

ஔவை அருள்

தமிழ் சொல்வளம் மிக்க மொழி. வழக்கில் உள்ள சொற்கள் சில ஆயிரமே என்றாலும், அகராதியில் உள்ள சொற்கள் இலட்சத்தைக் கடந்தவை. அகராதியில் இல்லாத பலநூறு சொற்கள் மக்கள் வழக்கில் உள்ளன.

புதிய சொற்களைப் படைக்க முயலும்போது, முதலில் பழைய சொற்களைத் தேடிப் பார்க்க வேண்டும். ஒரே சொல்லாகக் கிடைக்காவிட்டால், இணைப்புச் சொற்களை வைத்துக் கொள்ளலாம். அப்படியும் முடியாவிட்டால் தான், புதிய சொல்லைப் படைக்க வேண்டும்.

எந்தமுயற்சியுமேசெய்யாமல், 'இதற்கு என்ன தமிழ்' என்று சிலா அறைகூவல் விடுக்கிறார்கள். அவாகளுக்கான நம் மறுமொழி 'தேடுங்கள் கண்டடைவீா்' என்பதே. ஒரு முறை என் பாட்டனாா் உரைவேந்தா் ஔவை சு. துரைசாமியாா், 'ஸ்க்ரூ டிரைவா' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் உருவாக்கத்தில் ஈடுபட்டிருந்தாா். ஸ்க்ரூ டிரைவா் என்பது திருகாணியை இறுக்கவும், சுழற்றவும் பயன்படுவதால் அதனடிப்படையில் திருகாணி சுற்றுநா, திருகாணி ஓட்டுநா, திருகு சுழற்றுநா என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்தார்.

ஆயினும் ஒரே சொல்லாகத் தமிழில் அமைந்தால் நன்றாயிருக்குமே என்று எண்ணி, 'திருப்பான்' என்ற சொல் சரியாயிருக்குமா என்று யோசித்தார். அப்போது வீட்டில் மரவேலை செய்து கொண்டிருந்த தச்சா தன் உதவியாளரிடம் 'அந்தத் திருப்புளியை எடு' என்று கூறியது அவர் காதில் விழுந்தது.

உடனேஅவரிடம்ஓடிச்சென்று அப்பெயரைக் கேட்டபொழுது அவா, 'சாதாரண உளியிலிருந்து வேறுபட்டது திருப்புளி. இது திருப்புகின்ற உளி' என்றாராம். தனது பேராசிரியத் தமிழ் சாதிக்க அல்லற்பட்டுக் கொண்டிருந்ததை அந்தத் தச்சா தமிழ் எளிதாகச் சாதித்தது விட்டது என்றாராம்.

சொல்லுருவாக்கத்தில் ஈடுபடுமுன், எத்தொழில் செய்வாரிடம் அச்சொல் புழக்கத்திலிருக்கும் என்று பார்த்து, அவர்களைத் தேடிச் செல்வதை முதற் கடமையாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் சொல்லாக்கத்தின் கட்டளைக்கல்லாகும்.

அரசாங்கத்தின்வருமானத்தை இராணுவச்செலவுக்கு இவ்வளவு, கல்விச் செலவுக்கு இவ்வளவு என்று பங்கிடுவதைத்தானே 'பட்ஜெட்' என்கிறோம்? 'பாதீடு' என்பது தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஒரு சொல். வெற்றி பெற்ற ஒரு வேந்தன், வெற்றிப் பொருளைவீரர்களுக்குப்பகுத்துக் கொடுத்ததை 'பாதீடு தந்தனா' என்று 'புறப்பொருள் வெண்பா மாலை' குறிப்பிடுகிறது. ஈழத் தமிழாகள் இன்றும் 'பாதீடு' என்ற சொல்லைப்பயன்படுத்துகிறாா்கள். 'அமைச்சா பாதீடு தாக்கல் செய்தாா்' என்றே இலங்கை இதழ்கள் எழுதுகின்றன. ஒரு புதிய சொல்லைப் படைக்கு முன், அதற்கு ஈடான சொல் தமிழ் இலக்கியத்தில் எங்காவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். தமிழ் மக்களிடம், குறிப்பாக கிராமப்புற மக்களிடம் பேச்சு வழக்கில் இருக்கிறதா என்று ஆராய வேண்டும்.

நண்பா ஒருவா், 'மருத்துவமனைகளில் உள்ள லேபர் ரூமுக்கு தமிழில் என்ன பெயா' என்று கேட்டார். அப்போது வேறொரு நண்பா, 'அது மகப்பேறு நடைபெறும் இடம். எனவே, அதனை மகப்பேறு இல்லம் எனலாம்' என்றாா். அவா கூறியது ஒருவகையில் சரியே. ஆனால், அதற்குப் பழைய சொல் ஒன்று இருக்கிறது. அது 'ஈனில்' என்பதாகும். இது சங்க இலக்கியத்தில் உள்ள சொல். 'இல்' என்றால், இல்லம்; 'ஈன்' என்றால் பெறுதல். 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' என்பது புறநானூற்றுப் பாடல். 'மாடு கன்று ஈன்றது' என்பது இன்றும் மக்கள் வழக்கில் உள்ளது. எனவே, 'மகப் பேறு நடைபெறும் அறையை, 'ஈனில்' என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும்' என்றேன் நான்.

எந்தஒருமொழியும்அதனைப் பேசுவோர்களின் அறிவுக்கும் வளாச்சிக்கும் ஏற்பவும், கால சுழற்சியின் மாற்றத்திற்கேற்பவும் மாறிக்கொண்டே இருக்கும் என்பதைநாம்கண்டுவருகிறோம். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்கிறது நன்னூல் (462). தொல்காப்பியமும் 'கடிசொல்லில்லைக்காலத்துப்படினே' (சொல்.452) எனக் கூறுகிறது. மருத்துவம், பொறியியல், சட்டம், கணினியியல் போன்ற சிறப்புப் பகுதியின் கலைச்சொற்கள் உருவாக்குவதன் அவசியத்தை அனைவரும் அறிவோம். மொழி வளர்ச்சிக்கும் அறிவுத்திறன் பரிமாற்றத்திற்கும் புதுப்புது சொற்களை உருவாக்குவது இன்றியமையாததாக உள்ளது.

மொழிபெயாப்பு, ஒலிபெயர்ப்பு, கருத்தாக்கம் முதலியவற்றைப் பயன்படுத்தி உருவாக்கும் சொல் குறுஞ்சொல்லாக இருத்தல் நலம். மக்கள் பழக்கத்தில் உள்ள சொற்களை எடுத்தாளுவதோடு செம்மையான இலக்கியச் சொற்களையும் புகுத்தித் தமிழின் மேன்மையைத் தற்காத்துக் கொள்ளலாம். பலரின் கருத்துகளினால் உருவாகும் கலைச்சொல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உருவாகிக் குழப்ப நிலை ஏற்படாமல் இருக்க புதிய கலைச்சொற்களைப் பரவலாக்க வேண்டும். அன்றாட அலுவலுக்குத் தேவையான குறிப்புகளைத் தமிழிலேயே பொருள் பிறழாமல் மயக்கந்தரா வண்ணம், அனைவரும் எளிதில் புரியும்படி அமைந்தால், அது ஆட்சிமொழியாகவும், பயிற்று மொழியாகவும் பரவ இயலும். 'நன்னூல்' கூறுவது போல, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணாதல், ஓசை உடைமை, ஆழம் உடைத்து ஆதல், முறையின் வைப்பே, உலகம் மலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உணாத்தாதது ஆகுதல், நாவிற்கு (சொல்லிற்கு) அழகு என்னும் 10 இலக்கணக் கருத்துகள், இக்காலச் சொல்லுருவாக்கத்திற்கு மிகவும் பயன் தரும் வாய்ப்பாடு எனலாம் (நூற்பா 13).

பல்வேறு துறையினரடங்கிய கலைச்சொல் உருவாக்கக்குழு அரசின் கண்காணிப்பின் கீழ் அமைக்கப்பட்டு, வளரும் துறைகளுக்கான புதிய சொல்லை உருவாக்கி ஊடகங்கள் வாயிலாக பேசுமொழியில் புகுத்துவதன் மூலம் கலைச்சொற்களின் உருவாக்கம் உதவியுடையதாக அமையும். பயனுக்குள் வரும் புதியசொல், பழக்கத்தில் நுழைந்தால், சமூகத்திலும் தனி மனித உரையாடல்களிலும் பதிந்துவிடும். சங்க இலக்கியக் கால அறிவியற் சொற்களாக இருப்பவற்றைக் கண்டறிதல், கட்டாயமாக்குதல் நலம் பயக்கும்.

ஆங்கில மொழி அறிஞாகள், ஆங்கில மொழிச் சொற்களை தொகுத்தல் முறையில் அணியமாக்கி, மொழி ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களுக்கு வழங்கி வருகின்றனா. அதுபோல், உலகின் பழமையான மொழிகளுள் மூத்த மொழியாகக் கருதப்படும் நம் தமிழ் மொழியிலும் அத்தகைய தொகுப்பு தேவை என்பதை உணாந்து, 'சொற்குவை' என்ற திட்டம் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

இதில் தமிழில் உள்ள சொற்கள் அனைத்தையும் தொகுத்து நிரல்படுத்துதல், சொற்களின் இலக்கண வகைப்பாடுகளைப் பதிவுசெய்தல், நிகரான சொற்களை பதிவு செய்தல், சொற்களின் தொடராக்கப் பரிமாணங்களைப் பதிவு செய்தல், சொற்களுக்கான பொருள் விளக்கத்தைத் தேடும் வசதியை அமைத்துக் கொடுத்தல், அடிக்கடி தேடப்படும் சொற்களுக்கு வண்ண அடையாளம் கொடுத்தல், வந்த சொல்லே மீளவும் வராமல் தடுத்தல், புதிய சொற்களைப் பதிவு செய்தல் போன்ற வசதிகள் உருவாக்கப்பட்டு, அவை இணையதளப் பொதுவெளியில் உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வலாகளும், மொழியியல் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழறிஞா வீரமாமுனிவா, 'ஒரு மொழியின் வளாச்சிக்கு அம்மொழியின் சொல்வளம் இன்றியமையாதது. எந்த மொழியின் சொல்வளம் குன்றிப் போகிறதோ அந்த மொழி வழக்கொழிந்து தன் வாழ்நிலையையே இழக்கிறது. இவ்வாறு வழக்கொழிந்து போன மொழிகள் பல. இந்நிலைத் தமிழ் மொழிக்கு ஏற்படாமலிருக்கும் பொருட்டு நிகண்டுகளையும், அகராதிகளையும் உருவாக்கி, அதன்வாயிலாகத் தமிழ்ச் சொற்களைத் திரட்டி, பிற்காலத் தலைமுறைக்காகப் பாதுகாத்துவைத்தேன்.

அந்த நிகண்டுகளைச் சீரமைக்க எண்ணி, சொற்களை, அகர வரிசையில் அடுக்கியும், அச்சொற்களுக்கான பொருளைத் தந்தும், 'சதுரகராதி' என்னும் பெயரில் முதல் அகராதியை 1732-ஆம் ஆண்டில் படைத்தேன். அதன்வாயிலாக தமிழ் மொழியின் வளமையைக் காக்க வழியேற்பட்டது' என்று கூறியுள்ளாா். அவருக்குப் பின்னர் பேரகராதிகளைப் பலர் உருவாக்கினா. அவற்றுள் 'சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி', 'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அகராதி', 'கதிரைவேற்பிள்ளை அகராதி' போன்றவை குறிப்பிடத்தக்கவை. இத்தகைய அகராதிகள் இன்றைய மக்களின் பயன்பாட்டிற்குப் பெரும் உதவியாக இருக்கின்றன.

அறிவியல் தொழில்நுட்பம் வளாச்சி பெற்றுள்ள இன்றைய காலகட்டத்தில் புதிய சொற்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டியதும், பழந்தமிழ்ச் சொற்கள் பாதுகாக்கப்பட வேண்டியதும் கட்டாயக் கடமை. எதிர்காலத் தலைமுறையினருக்காகத் தமிழ்ச்சொற்கள் அனைத்தையும் சேமித்துப் பதிவு செய்து வைக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் 'சொற்குவை' திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஒருவர் ஆங்கிலத்தில் ஒன்றைக் கூறிவிட்டால் உடனே போட்டி போட்டுக்கொண்டு அதனைப் பலரும் தமிழில் மொழிபெயர்ப்பு செய்வது தற்போது வழக்கமாகிவிட்டது. அவா அதனை ஆங்கிலத்தில் ஏன் சொன்னார், எதற்காகச் சொன்னார் என்று எவரும் சிந்திப்பது கிடையாது. எவ்வளவோ பொருளடக்கங்களுக்கு கலைச்சொல் உருவாக்க வேண்டியிருக்கிறது. ஏன், எதற்கு புரிந்துகொள்ளாமல் உடனே மொழிபெயாப்பு செய்வதைத் தவிர்ப்பது நலம் பயக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள மாணவச் செல்வங்கள், 'எந்த கருத்தையும் தாய்மொழியில் எடுத்துரைப்பேன்' என்கிற உறுதிமொழியை ஏற்க வேண்டும்.

(நன்றி: தினமணி)

# மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்துக்கு சுன்னாகம் லயன்ஸால் குடிதண்ணீர் வசதி

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் மயிலிட்டி கலைமகள் வித்தியா லயத்தின் குடிதண்ணீர் விநியோக சீரற்ற செயற்பாட்டைச் சீர்செய்வதற்காக கழக உறுப்பினர் லயன் எஸ்.சசீந்திரராஜாவால் சீர் செய்வதற்கான நிதி அனுசரணை காசோலையாக வழங்கப்பட்டது.

வலி.வடக்கின் மீள்குடியேற்றப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு பாடசாலை மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம். அந்தப் பிரதேசத்தில் மக்கள் தற்போதுதான் குடியேறி வருகின்றார்கள். அதனால் பாடசாலையின் தேவைப்பாடுகளும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. பாடசாலைச் சமூகத்தினர் லயன்ஸ் கழகத்தினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் அவர்களால் டிசெம்;பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதி டெங்கு விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் நடைபெற்று வஐகின்றது.

இந்தவிழிப்புணர்வுக்கருத்தரங்கை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அஜந்தன் நிகழ்த்தி வருகிறார்.

அவர்களின் இந்தச் செயற்பாட்டின் மேலும் ஒரு பகுதியாக வலிகாமம் வலயத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கழிவுகளைத் தரம்பிரித்து இடுவதற்கு மூன்று வெவ்;வேறுவர்;ணங்களைக்கொண்ட குப்பை வாளிகள் வழங்கப்பட்டன.

அதன் ஒரு பகுதியாக மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்துக்கு லயன் எஸ்.சசீந்திரராஜாவால் மூன்று குப்பை வாளிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளர் லயன் சி.ஹரிகரன், பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ், வலயத் தலைவர் லயன் க.டினேஷ், ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# வடக்கிற்கு அனுப்பிய சீனியில் 30,000 கிலோ திருப்பப்பட்டது

வட மாகாணத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு 80,000 கிலோகிராம் சீனி அனுப்பப்பட்டிருந்த நிலையில் அதில் தரமற்றதாகக் கருதப்படும் 30,000 கிலோகிராம் சீனி திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 320 ரூபாவிற்கு சீனி விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் வட மாகாணத்திற்கு 100 மெற்றிக் தொன் சீனியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்தொழில் அமைச்சரிடம் உறுதியளிக்ககப்பட்டது.

அத்துடன் கிடைக்கும் சீனியை கூட்டுறவு சங்கங்கள் மூலம் 280 ரூபாவிற்கு மக்களிற்கு வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் சீனியின் தாராதரம் பார்வையிடப்பட்ட பின்னர் வடக்கிற்கு குறித்த நிறுவனத்தால் 80,000 கிலோ சீனி அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் தரமற்ற சீனியாக அடையாளம் காணப்பட்ட 30 ஆயிரம் கிலோகிராம் சீனி மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா -

பொதுமக்களிற்கு தரமான பொருள்கள் மாத்திரமே வழங்கப்படும். கூட்டுறவு சங்கத்தினர் தரமற்ற சீனியை திருப்பி அனுப்பியது நல்ல விடயமாகும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# யாழ். சிறையில் பெண் கைதிக்கு துன்புறுத்தல்

## முறைப்பாடு பதிவு

யாழ். சிறைச்சாலையில் பெண் கைதியொருவர் சிறைக்காவலர்களால் துன்புறுத்தப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்துபாதிக்கப்பட்டபெண்ணின்உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டில், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த பெண் கைதியை வியாழக்கிழமை பார்வையிட சென்ற போது, அவர் 'தன்னை சிறைக்காவலர்கள் துன்புறுத்துகின்றனர் எனக் கூறி அழுதார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

அண்மையில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மனிதவுரிமை தின சிறப்பு நிகழ்ச்சிகள்

## யாழில் புதன்கிழமை

யாழில் 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை சிறப்பிக்கும் விதமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய காரியாலயம் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சி எதிர்வரும் புதன்கிழமை மு.ப 09.45 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணிவரை யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் உள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

குறித்தநிகழ்வில்இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பில் கலந்துரையாடலும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)


# சர்வதேச தரத்தினாலான சதுரங்கப் போட்டி ஆரம்பம்

யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும், 'யாழ் சர்வதேச சதுரங்க போட்டி 2023' வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது. குறித்த போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள செல்வா பலஸில் நடைபெறும் போட்டியின் ஆரம்ப நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா, இந்திய துணைத்தூதரக அதிகாரி ஸ்ரீ ராம் மகேஷ், இலங்கை சதுரங்க கழகத்தின் தலைவர் லக்ஸ்மன் விஜேசூரிய, ஞானம் பவுண்டேசனின் உப தலைவர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

800 இற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்துகொண்டுள்ள குறித்த போட்டியில் 150 இற்கு மேற்பட்டவர்களுக்கு பரிசு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
Ice Cream & Fruit Salad
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=





# மன்னார் பேசாலை வெற்றிநாயகி திருவிழா

மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய திருவிழா திருப்பலி நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பணியும், அதனைத்தொடர்ந்து ஆசியும் மன்னார் மறைமாவட்ட ஆயரால் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

இத்திருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# என் உயிர் ராஜபக்ஷக்களுக்கே ரோஹித அபரிமித நன்றியுணர்வு

எனக்கு பலர் அரசியல் ரீதியாக சேறு பூசும் வேலைகளை செய்யலாம். என்னைக் கொலையும் செய்யலாம். உடலை இரண்டாக துண்டித்தாலும் என் உயிர் ராஜபக்ஷர்களுக்கே. மஹிந்த ராஜபக்ஷ போன்று இந்த நாட்டுக்கு இதுவரை எவரும் சேவை செய்யவில்லை. இனியும் செய்யப்போவதுமில்லை என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.



பொதுஜன பெரமுனவின் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அரசமைப்புக்கு அமைய முதலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவேண்டும் என்பதுடன் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பிற்போடப்பட்டப்பட்ட குறித்த தேர்தல் எப்போது இடம்பெறும் என்பது தெரியாது. இந்தத் தேர்தல் இடம் பெறவில்லை எனில் நிச்சயம் அடுத்த வருடம் நவம்பர் மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற வேண்டும்.

எந்த தேர்தலுக்கும் கட்சி என்ற ரீதியில் நாம் தயாராக இருக்கிறோம். அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை நாம் இதுவரையில் தீர்மானிக்கவில்லை. நிச்சயம் வெற்றி பெறும் வேட்பாளர் ஒருவரை எமது கட்சியிலிருந்து முன்னிறுத்துவோம். மொட்டுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் பொதுத் தேர்தல் மூன்றுக்கு முகங்கொடுத்துள்ளது. இந்த மூன்று தேர்தல்களிலும் நாம் வெற்றி பெற்றுள்ளோம். அடுத்த தேர்தலிலும் வெற்றி பெறுவோம்.

நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமே உள்ளது. நாமே அவருக்கு ஆதரவு வழங்கினோம். அடுத்த தேர்தல் வரும் வரையில் அவருக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். இடைநடுவில் குழப்பத்தைத் தோற்றுவிக்க மாட்டோம்.

இருப்பினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஷில் ராஜபக்ஷ உருவாக்கிய கட்சியை உறுதியான கொள்கைகளுடன் முன்னோக்கிக் கொண்டு செல்வோம். நாட்டு மக்களின் நம்பிக்கையை வென்ற கட்சியாக பொதுஜன பெரமுன காணப்படுகிறது. எதிர்காலத்தின் கட்சியின் எழுச்சிக்கு எமது பொறுப்புகளையும் கடமைகளையும் சரிவர முன்னெடுத்துச் செல்வோம். எனக்கு பலர் அரசியல் ரீதியாக சேறு பூசும் வேலைகளைச் செய்யலாம். என்னை கொலையும் செய்யலாம். எனது உடலை இரண்டாக துண்டித்தாலும் என் உயிர் ராஜபக்ஷர்களுக்கே. மஹிந்த ராஜபக்ஷ போன்று இந்த நாட்டுக்கு எவரும் இதுவரையில் சேவை செய்ததில்லை. இனியும் செய்யப்போவதும் இல்லை. - என்றார். (05)

# துப்பாக்கியுடன் துருக்கி செல்வதற்கு முயன்றவர் கட்டுநாயக்கவில் கைது

துருக்கி செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்த ஒருவர் தனது பயணப் பொதிகளில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை மறைத்து வைத்திருந்த நிலையில், நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொட பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடைய அவர், கட்டுநாயக்க விமான நிலையத்தை அதிகாலை சென்றடைந்துள்ளார்.

விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் அங்கு அவர் கொண்டு வந்த பயணப்பொதிகளை ஸ்கேன் செய்ததில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# இந்து மயானத்தில் இருந்த இரும்புத் தூண்கள் திருட்டு

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழில் இந்து மயானம் ஒன்றின் தகன மேடையில் இருந்த இரும்பு தூண்கள் திருடப்பட்டுள்ள சம்பவம் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வட்டுக்கோட்டை வழுக்கையாறு, இந்து மயானத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் இரும்புத் தூண்கள் இல்லாமையால் சடலங்களை எரியூட்டுவதில் மிகுந்த சிரமம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் மயானத்தில் பொருத்தியிருந்த மின் குமிழ்களையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து மயானத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# கொடிகாமம் கொள்ளை தொடர்பில் மூவர் கைது



கொடிகாமம் பகுதியில் உள்ள இளைஞனை தாக்கி அவரது வீடு புகுந்து சேதப்படுத்தி நகை பணங்களை கொள்ளையிட்டு சென்ற சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் விசாரணைகளுக்கு பின்னர் இன்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் -கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி பகுதியில் கடந்த புதன்கிழமை வீதியால் சென்ற இளைஞன் மீது வன்முறைக் குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன், குறித்த இளைஞனின் வீட்டிற்குச் சென்று பெறுமதியான உடமைகளை அடித்து நொறுக்கி, வீட்டில் இருந்த நகை,பணம் போன்ற பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

காயப்பட்ட இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## 13ஜ முழுயாக....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். வடக்கு கிழக்கு மற்றும் பெருந்தோட்டங்களில் உள்ள பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தும் வேலைத்திட்டம் அந்த மாகாணங்களை மையமாக வைத்து நடைமுறைப்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி இதன்போது கருத்து தெரிவித்தார். இதன்படிஇ பூநகரி நகரம்எதிர்காலத்தில்புதுப்பிக்கத்தக்க வலுசக்திமையமாகமாறும்என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் சுட்டிக்காட்டினார் - என்று பவகுகன் மேலும் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் செயற்திட்டத்தைப் பாராட்டியஉலகதமிழர்பேரவையின் பிரதிநிதிகள்இ அதற்கு தமது முழு பங்களிப்பை வழங்குவார்கள் என்றும் உறுதியளித்துள்ளனர். ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் ‘இமயமலைப் பிரகடனம்’வெளியிடக்கிடைத்தமை குறித்தும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

## மின்சார சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சட்டமூலத்தில் பல குறைபாடுகள் காணப்படுவதாக நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் வெளிக்கொணரப்பட்டது.

வர்த்தமானியில் இலங்கையில் இல்லாத சில எழுத்துக்கள் உள்ளதால் அந்த வர்த்தமானியை இரத்து செய்து மற்றுமொரு வர்த்தமானியை அச்சிடுமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் கோரிக்கை விடுத்தனர்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய தயாசிறி ஜயசேகர, கடந்த 5ஆம் திகதி மின்சார சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. ஆனால் அத்தகைய வர்த்தமானி வெளியிடப்படவில்லை.

ஐந்தாம் திகதி அவ்வாறான வர்த்தமானி எதுவும் அச்சிடப்படவில்லை. வர்த்தமானி இன்று அதிகாலை மூன்று மணிக்கு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.இதை ஏழு நாட்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதன்படி எதிர்வரும் 12ஆம் திகதியே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

அன்றுமுதல்14நாட்களுக்குள்ளே வழக்கு பதிவு செய்ய வேண்டும். அப்போது 28 ஆம் திகதி ஆகிவிடும். 28ஆம் திகதி நீதிமன்றம் விடுமுறை அளிக்கிறது.

இந்தச் சட்டம் தொடர்பில் எந்த தொழிற்சங்கத்துடனும் கலந்துரையாட வில்லை, எந்த நுகர்வோர் சங்கத்துடனும் விவாதிக்கப்படவில்லை. இது மற்றொரு ஒப்பந்தமா என்ற கேள்வி எமக்கு உள்ளது.இந்தச் சட்டம் குறித்து விவாதிக்க எங்களுக்கு காலம் இல்லை. குழு அறையில் கலந்துரையாடவில்லை, தொழிற்சங்கங்களுடன் விவாதிக்கவில்லை.

குறைந்தபட்சம் மின்சார சபை அதிகாரிகளுடன் கூட கலந்துரையாடவில்லை. இது மிகவும் பயங்கரமான சட்டமாகும். இது போன்ற வர்த்தமானி வெளியிட்டு எமக்கு வழக்குத் தாக்கல் செய்வதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்கின்றனர்.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் என்ன நடக்கும்? நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து நீதிமன்றம்விடுமுறைவழங்கினால் என்ன நடக்கும்? அரசு திட்டமிட்டே இதனை செய்கிறது என்ற சந்தேகம் எமக்கு இருக்கிறது. அதனால் இந்த பிழையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாம் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த ஜேவிபி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, இது திட்டமிட்டப்பட செயல். நீதிமன்றத்தையும் நாடாளுமன்றத்தையும்தவிர்ப்பதற்கான செயல். அதனால் வர்த்தமானி அறிவிப்பை5ஆம்திகதிஎனகொள்ளாமல் இன்றுமுதல் ஒரு வாரம் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த சபைமுதல் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிக்கையில், குறித்த சட்டம் முதலாம் வாசிப்புக்கு சபைக்கு சமர்ப்பிக்க வில்லை. அதன் பின்னர்தான் 14 நாட்கள் கொள்ளப்படும். இது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்கு அனுப்புகிறேன். என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷடி சில்வா குறிப்பிடுகையில், மின்சார சபை சட்டம் தொடர்பான சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் ஆங்கல எழுத்துக்களில் தெளிவில்லாத விடயங்கள் இருக்கின்றன.

அதனால் இந்த வர்த்தமானி அறிவிப்பைபுதிதாகவெளியிடுங்கள். சிங்களமொழியில்வெளியிடுங்கள். புதியதிகதியில்வெளியிடவேண்டும் என்றார்

அதற்கு சபைமுதல்வர் பதிலளிக்கையில், வர்த்மானி எப்போது வெளியிட்டாலும் இது நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் திகதியில்இருந்துதான்நாட்கள்கணக்கிடப்படும். அதனால் இது நீண்ட விவாதம் மேற்கொள்ள வேண்டிய சட்டமாகும் என்றார்.

மீண்டும் எழுந்த தயாசிறி ஜயசேகர குறிப்பிடுகையில், வர்த்தமானி அறிவிப்பின் 6ஆம் பக்கத்தைபாருங்கள்அதில்இருப்பது இலங்கையில் பயன்படுத்தும் எழுத்துக்களே அல்ல.

இவ்வாறு அவசரப்பட்டு வர்த்தமானி வெளியிட்டு நாட்டுக்கு செய்யப்போகும் அழிவு என்ன என கேட்கிறோம் என்றார்.

இறுதியாக சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் குறிப்பிடுகையில், இது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுசெல்வதாக சபைமுதல்வர் தெரிவித்திருக்கிறார் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## வடக்கு கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் 45 பேரில் 43 பேர் தமிழர்களாக உள்ளனர். இவர்களின்கொலைக்குஎவ்விதமான நீதியும் வழங்கப்படவில்லை. அதேபோன்றுஊடகநிறுவனங்களும் தாக்கப்பட்டுள்ளன. ஆனால் அதனுடன் தொடர்புடையவர்கள் தற்போதும் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறானபின்னணியில்தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் ஊடகவியலாளர்கள் விசாரணைகளுக்கு அழைக்கப் படுகின்ற நிலமைகள் நீடிக்கின்றன என்றார்.

இவரைத் தொடர்ந்து சாள்ஸ் நிர்மலநாதன் தனது உரையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் சம்பந்தமாக ஊடகவியலாளர்கள் இன்னமும் அச்சத்துடன்தான் இருக்கின்றார்கள். அவர்கள் அந்தச் சட்டத்தின் கீழ் தாம் கைது செய்யப்படுவோமா என்ற நெருக்கடியின் கீழ்தான் பணிகளை ஆற்றுகின்றார்கள் என்றார்.

## ஒரு தரப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாரையும் பகைத்துக்கொள்ளாமல் எந்த தரப்புக்கும் சாதகமாக இல்லாமல்அவதானத்துடன்இருக்க வேண்டும்.

இந்த நட்புறவின் மூலம் பல வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது. குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் கடன் மறுசீரமைப்புக்கு பாரிஸ்சமூகத்தில் சில வழிமுறைகள் உள்ளன. குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு மேல் உள்ள நாடு என்ற வகையில், கடனை மறுசீர மைப்பதற்கான பொறிமுறை நம்மிடம் இல்லை. எனவே நாங்கள் எமக்கே உரிய பொறிமுறையை தயார் செய்ய வேண்டியிருந்தது. இதன்போது, பாரிஸ் கிளப்பிற்கு வெளியே இந்தியா, சீனா மற்றும் ஜப்பானின் ஆதரவின் மூலம் பாரிஸ் கிளப்பிலிருந்து சில உதவிகளைப் பெற முடிந்தது.

கடந்த மாத நிலவரப்படி, நமது நாட்டின் கடனை மறுசீரமைக்க அனைத்து நாடுகளும் ஆதரவளிக்க ஒப்புக்கொண்டுள்ளன. இதன் காரணமாக, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாட்டில் கடன் மறுசீரமைப்பை விரைவுபடுத்தும் திறன் எம்மிடம் உள்ளது. அத்துடன், டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்துடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக இலங்கை, சரியான பாதையில் செல்கிறது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஜனாதிபதியின் சரியான தீர்மானங்கள் காரணமாக இந்தியா, சீனா, மேற்கத்திய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் உட்பட அனைத்து நாடுகளிலும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன்வழங்குநர்களின் ஒப்புதலைப் பெற முடிந்துள்ளது.

கடன் மறுசீரமைப்பிற்குப் பிறகு, நம் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிடும் என்பதை உலகிற்கு அறிவிக்க முடியும். எமது மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். ஆனால் இன்று நாட்டை அந்த நிலையிலிருந்து மீட்டெடுக்க எமது ஆட்சி படிப்படியாகச் செயல்பட்டு வருகிறது. கடன் மறுசீரமைப்பு மூலம் நாம் செலுத்தவேண்டிய கடனின் அளவைக் குறைக்க முடிகிறது. மேலும், கடனைச் செலுத்தும் அளவைக் குறைத்து, வட்டியைக் குறைப்பதன் மூலம், நாம் செலுத்த வேண்டியகடனில்இருந்துபலபில்லியன்அமெரிக்கடொலர்கள்நிவாரணத்தை எமது நாடு பெறும் திறன் உள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் புதிய முதலீட்டாளர்கள் தேவை. அதற்கான வேலைத்திட்டத்தை நாம் இப்போது தொடங்கியுள்ளோம். அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில், தற்போதுள்ள பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மேலும் மேம்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றார்.




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
BOOK
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# நீதிமன்ற உத்தரவை மீறியவர்களே பொலிஸால் கைதுசெய்யப்பட்டனர்

## நீதியமைச்சர் விஜயதாஸ அடித்துக் கூறுகிறார்

உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்வதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. ஆனால் தடை செய்யப்பட்ட அமைப்பின் கொடி, இலட்சினைகள் ஆகியவற்றை பயன்படுத்த முடியாது.

நீதிமன்றத்தின் உத்தரவை மீறியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவ்விடயத்தின் நான் ஒன்று செய்ய முடியாது.

கைது செய்வதற்கு எவரும் கட்டளை பிறப்பிக்கவில்லை. பொலிஸார் தமது கடமையைசெய்துள்ளார்கள்எனநீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

குற்ற ஒப்புதல் அளிக்கப்பட்டு குறுகிய காலம் கால அவகாசம் வழங்கப்பட்டது. சகல தரப்பினரது ஆலோசனைகளுக்கும் அமைய தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி, புதிய சட்டத்தை உருவாக்க முன்வைக்கப்பட்ட சட்ட நகலை ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சலாலுக்குட்படுத்தினார்கள்.

இவ்வாறான நிலையில் 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டது.தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் அப்போது கடுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பு. நாட்டுமக்களின்உயிரைப்பாதுகாப்பதற்காகவே பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.இதில் ஆட்சியாளர்களைக் குறை கூற முடியாது.அது அவர்களின் பொறுப்பாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் வலுப்பெற்றது.

இவ்வாறான நிலையில் கடந்த ஆண்டு முதல் உத்தேச பயங்கரவாத தடைச்சட்டமூலத்தை சமர்ப்பித்தேன்,அந்த சட்டமூலம் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்தரப்பினர் மாறுபட்ட கருத்துக்களை முன்வைத்ததால் அதனை வாபஸ் பெற்று முதல் நகலைத் திருத்தம் செய்ய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன்.

உத்தேச பயங்கரவாத தடைச்சட்டமூலம் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சில்ஈடுபட்டுஅவர்களின்நிலைப்பாட்டையும் பெற்றுக்கொண்டுள்ளேன்.எதிர்வரும் மாதமளவில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்து செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிடுகிறார். ஆனால் அவரை கொலை செய்ய முயற்சித்தவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு.நாம் அனைவரும் மனிதர்கள். ஆகவே உறவுகளின் முக்கியத்துவத்தை மதிக்க வேண்டும்.

ஆனால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் பெயர்,இலட்சினைகள் ஆகியவற்றை பயன்படுத்த முடியாது.

அண்மையில் இடம்பெற்ற நினைவேந்தல் தினத்தன்று நீதிமன்றத்தின் உத்தரவை மீறி செயற்பட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.அது பொலிஸாரின் பொறுப்பு.இவ்விடயத்தின் நான் என்ன செய்ய முடியும்.இவர்களைகைதுசெய்வதற்குஎவரும் கட்டளை பிறப்பிக்கவில்லை. - என்றார்.(05)

# மாதுருஓயா அபிவிருத்திக்கு மகாவலி காணிகள் மோசடி

## மைத்திரிபால குற்றச்சாட்டு



மாதுரு ஓயா தெற்கு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மகாவலி அதிகார சபையின் காணிகள் மோசடி செய்யப்படுகின்றன. மகாவலி காணிகளில் விவசாயிகளுக்குமுன்னுரிமைவழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தற்போது ஊழல் மோசடியாளர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்படுகிறது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் சுற்றுலாத்துறைமற்றும் காணி அமைச்சு, புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

மகாவலி அபிவிருத்தி செயற்திட்டத்துக்கமைய பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை ஒன்றிணைக்கும் வகையிலான 'மாதுரு ஓயா' தெற்கு அபிவிருத்தி திட்டம் 'தொடர்பில் கடந்த 30,40 ஆண்டுகாலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

எவ்விதமான தூரநோக்க திட்டமிடலுமில்லாமல் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 'மாதுரு ஓயா 'தெற்கு அபிவிருத்தி திட்டம்' ஆரம்பமானது. இந்தத் திட்டத்தின் ஊடாக மகாவலி அபிவிருத்திக்கு சொந்தமான காணிகள் 100 ஏக்கர், 200 ஏக்கர் மற்றும் 500 ஏக்கர் என்ற அடிப்படையில் தனியாருக்கு காணிகள் வழங்கப்பட்டன. தற்போது அந்த காணிகளை சுற்றி வேலி அடைக்கப்பட்டுள்ளன. ஆனால் காணிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

அபிவிருத்தி என்று குறிப்பிட்டுக் கொண்டு மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் மோசடி செய்யப்படுகின்றன. மகாவலியின் காணிகளில் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தற்போது ஊழல்வாதிகளுக்கு தான் மகாவலி காணியில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. மகாவலி அதிகார சபை மாத் திர மல்ல காணியுடன் தொடர்புடைய சகலநிறுவனங்களிலும் மோசடிகள் இடம்பெறுகின்றன. நடுத்தர மக்கள்தமதுகாணிஉறுதிக்காகஇன்று வரை போராடுகிறாக்ள். இந்தநிலைமை மாற்றம் பெற வேண்டும். - என்றார். (05)

# போதைப்பொருள், பணம், கத்தியுடன் ஹறதயாவின் பிரதான சகா கைது

போதைப்பொருள் வலையமைப்பை நடத்திவரும் போதைப் பொருள்கடத்தல்காரரும்திட்டமிட்ட குற்றவாளியுமான ஹந்தபாங்கொட ஹதயாவின் பிரதான சகா ஒருவர் ஹெரோயினுடன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படை தலைமையக முகாமின் (கொழும்பு பிராந்தியம்) விசேட சுற்றிவளைப்பு பிரிவினர் அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கபுருகொட வீதியில் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, 8 கிராம் 390 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் கூரிய கத்தியை வைத்திருந்த 43 வயதுடைய ஹோமாகமவைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து போதைப் பொருள் விற்பனை மூலம் பெறப்பட்டதாக நம்பப்படும் 10,000 ரூபா பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசியும் கைப்பற்றப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக அதுருகிரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபர் பாரியளவிலான போதைப்பொருள்கடத்தல்காரரும், தற்போது வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான ஜாகொடவின் தனுஜா சம்பத் என்ற ஹந்தபாங்கொட ஹதயாவின் சகா எனத் தெரிய வந்துள்ளது. (05)

# ஹங்வெல்ல கொலையில் இரு சந்தேகநபர்கள் கைது

ஹங்வெல்ல பிரதேசத்தில் நபரொருவரை தலைக்கவசம்மற்றும்கூரியஆயுதம்என்பவற்றினால் தாக்கி கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய இரு நபர்கள் சந்தேகத்தின் பேரில் தெற்கு மாவட்ட குற்றப்பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொஸ்கம, சூரிய வெளி பிரதேசங்களைச் சேர்ந்த 24 மற்றும் 31 வயதுடையவர்களாவர்.

தெற்கு மாவட்ட குற்றப்பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கொஸ்கம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இறுதிச் சடங்கு வீட்டில் ஒருவர் வெட்டிக்கொலை

சீதுவை - லியனகேமுல்ல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் இறுதி சடங்கு வீடு ஒன்றில் கலந்து கொண்டு ஒருவரை வெட்டிக்கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் லியனகேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபராவார்.

இவர் லியனகேமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற இறுதி சடங்கு வீடு ஒன்றில் கலந்து கொண்ட போதே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொலை தனிப்பட்ட நோக்கத்திற்காக இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பிறப்பு வீதம் வீழ்ச்சி

இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதத்தில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் தொடர்பான தரவு அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. 2014ஆம்ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, இவ்வருடம் ஜுலை மாதம் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில், பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 68 ஆயிரத்து 920 ஆகக் குறைந்துள்ளது. ஆனால், 2022 ஆம் ஆண்டில் வருடாந்த பிறப்புகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 75 ஆயிரத்து 321 என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 2021ஆம் ஆண்டில், பிறப்புகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 84 ஆயிரத்து 848 ஆகவும், 2020 இல் 3 லட்சத்துக்கும் அதிகமான பிறப்புகளும் பதிவாகியுள்ளன.

இதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு பிறப்பு பதிவு 6 ஆயிரத்து 401 ஆகக் குறைந்துள்ளதுடன், 2020 ஆம் ஆண்டுடன்ஒப்பிடுகையில்41ஆயிரத்து 786 பிறப்புகள் குறைந்துள்ளன.

இந்நிலையில், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள், பிறப்பு கட்டுப்பாட்டுத் திட்டங்கள், குடும்பக் கட்டுப்பாடு முறைகள், உலகளாவியதொற்றுநோய்கள்போன்ற காரணங்களால் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள மக்கள் தயக்கம் காட்டுகின்றனர் என சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (05)

# 16 வயதுச் சிறுமி துஸ்பிரயோகம் மாமனார் ஆக இருந்தவர் கைது

16 வயதுச் சிறுமியை துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச் சாட்டில் ஆனமடு, பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

18 வயதானவுடன் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த சிறுமியையே குறித்த நபர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தான் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் குறித்து அச்சிறுமி தான் திருமணம் செய்வதற்குத் தீர்மானித்திருந்த இளைஞனிடம் தெரிவித்துள்ள நிலையில், அதிர்ச்சியடைந்த இளைஞன் தன் தந்தை மீது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் ஆனமடு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பேராசிரியர் செ.யோகராசா வியாழனன்று காலமானார்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பேராசிரியரான செ.யோகராசா வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

யாழ்.வடமராச்சி கரணவாய் கிராமத்தில் பிறந்த இவர் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில், குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவராவார்.

கடந்த 1991 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில், மொழித்துறை விரிவுரையாளராக இணைந்த இவர், 2009 இல் பேராசிரியராக நியமனம் பெற்று 2014 இல் 23 வருட பல்கலைக்கழக பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

அதுமட்டுமல்லாது இதுவரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள், எட்டு நூல்கள், ஆறு தொகுப்புநூல்களை அவர் படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேசத்துக்கு அரசு வழங்கிய வாக்குறுதிகளை மீறி விட்டதாம்

## பீரிஸ் குற்றச்சாட்டு

புதிய சட்டம் உருவாக்கப்படும் வரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்தப் போவதில்லை என சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறி விட்டதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறி, தமக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அரசாங்கம் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில் வாக்குறுதியை மீறி விட்டு புதிய வாக்குறுதிகளை வழங்கினால் அதனை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளாது என்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சர்வதேசத்துடன் இணக்கமாக செயற்படுகிறோம் என்று பேச்சளவில் குறிப்பிடுவதால் மாத்திரம் முன்னேற்றமடைய முடியாது என்றும் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் தலையிடும் சூழலை நல்லாட்சி அரசாங்கமே உருவாக்கியது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

(05)

# பூசாரி மேற்கொண்ட தாக்குதலில் அண்ணன் சாவு; தங்கை காயம்

பூசாரியொருவர் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் மட்டக்களப்பு, மாங்கேணி பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் பேய், பிசாசு, ஆவிகளை விரட்டி யடிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன எனக் கூறப்படும் ஆலயமொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பூசாரியிடம் அண்ணன், தங்கை என இருவர் சென்றுள்ள நிலையில் குறித்த பூசாரி இருவரையும் தாக்கியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் படுகாயமடைந்த அண்ணன் உயிரிழந்துள்ள நிலையில் தங்கை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை குறித்த பூசாரி தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரின் விசாரணையில் உயிரிழந்த நபருக்கும் பூசாரியின் மனைவிக்கும் இடையே தவறான தொடர்பு இருந்ததை அறிந்தே குறித்த பூசாரி தாக்குதல் மேற்கொண்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவர் மட்டக்களப்பு புனானை பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதானவர் எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பான மேலக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகினர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.12.2023இல் வெளியிடப்பெற்றது.